பட்டுள்ளது. நல்லான் என்ற 30 வயதுள்ள ஒருவரும், 2 வயதுள்ள லலிதா என்ற பெண் குழந்தையும் கடலூரில் உள்ள அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் உயிரிழந்தனர். அந்த மருத்துவ மனையிலுள்ள மீதி 6 பேர்களும் நலமுற்று வருகிறார்கள். அந்த லாரியில் பயணம் செய்த மற்ற 3 பேர்களும் காயமின்றி உயிர் தப்பினார்கள். உளுந்தூர்ப்பேட்டை அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 7 பேர்களில் நால்வர் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மற்ற மூவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர். ஜோசப் என்ற லாரி ஓட்டுனர் கைது செய்யப்பட்டுள்ளார். லாரி சுத்தம் செய்பவர் தப்பி ஓடி விட்டார். இ.பி.கோ. 304ஏ, 337 மற்றும் 338 என்ற பிரிவுகளின் கீழ் குற்றம் எண் 269/77—ல் திருநாவலூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. உளுந்தூர்ப்பேட்டை மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவ உதவி அதிகாரிகள் மூவரும், கடலூர் மாவட்ட தலைமை மருத்துவ மனையைச் சேர்ந்த மூன்று உதவி மருத்துவ அதிகாரிகளும் பிரேத பரிசோதனை செய்துள்ளனர்.

மேற்கூறிய விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருவதால் விசாரணைக்குப் பிறகு அரசு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் என்ற உறுதியின் பேரில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவுதர மறுக்கப்படுகிறது.

5. தகவல் கோரல்.

(அ) ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் அப்பொருள் குறித்துப் பேசுவது குறித்து :

திரு. க. சுப்பு : நான் பேசப் போவதில்லை. நான் கொடுத்திருக்கிறேன் என்பதால் ஒரேவொரு பாயிண்டை மட்டும் கிளாரிபை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் ஒப்புக்கொணடார்கள்.

திரு. க. சுப்பு : நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் ஒரு மெம்பர். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. எல்லா உறுப்பினர்களும் தங்களைப் போன்றே கேட்க ஆரம்பித்தால் நேரம் வீணாகும்.

திரு. க. சுப்பு : நான் பேசவில்லை. கட்சிக்கு ஒருவர் பேசினால் போதும் என்பதால் நான் பேசவில்லை. அரசாங்க அறிக்கையிலே நான் கேட்பது வந்திருந்தால் உட்கார்ந்திருப்பேன. அது வரவில்லை என்பதால்தான் கேட்கிறேன். லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு செல்லக்கூடாது என்று அரசாங்க உத்தரவு இருக்கிறது. அந்த அரசாங்க உத்தரவு ஏன் அமுல் நடத்தப்படவில்லை? இதனால்தான் வந்தது இந்த விபத்து. இதுபற்றி விளக்கம் கொடுக்கப்படவில்லை என்பதற்காகத்தான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து—பேரவைக்கு ஓர் அறிவிப்புத் தருகிறேன். இனி ஒத்தி வைப்புத் தீர்மானம் தருகிற முதல் உறுப்பினரை, அந்த உரிமையோடு பேச அனுமதித்தால்தான் அவை நேரத்தைக் குறைத்துக் கொள்ளமுடியும் என்று கருதுகிறேன். திரு. சுப்பு அவர்களுடைய உரிமையை நான் பறிக்கவில்லை. ஆனால், பாதிக்கப்பட்ட தொகுதி உறுப்பினர்கள் சொன்னால் போதும் என்று சொன்னேன். அமைதியாக இருந்தீர்கள். இப்பொழுது தாங்கள் மட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்காக என்று சொல்லி, பேசினால், மற்ற உறுப்பினர்களுக்கு உரிமை தரவில்லை என்ற வேதனையை அளிக்கும். அது வேணடாம், உட்காருங்கள்.

திரு. என். சுந்தரராஜ் : இப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மீது ஒரு கட்சியின் சார்பில் அனுமதி கொடுக்கிற பொழுது, அதைப் போல், பாக்கி கட்சிகள் சார்பிலும் ஒவ்வொரு நபர் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனைவரையும் அனுமதிக்கத் தயார். அதைப்பற்றி கொஞ்சம் கூடச் சந்தேகம் இல்லை. நம்முடைய நேரம் வீணாகாமல், விவாதத்திற்கு அதிகம் நேரம் வேண்டுமென்றீர்கள். அதற்காகத்தான் சொல்கிறேன். எல்லோருமே பேசுங்கள், விளக்கம் தாருங்கள். ஆனால், நம்முடைய அவையில் முக்கியமான மானியத்தில் அதிகமாகப் பேச வேண்டுமென்று விரும்புவதால், அதைத் தீர்க்க வேண்டுமென்று கூறுகிறேனே தவிர, உங்களுடைய உரிமையைப் பறிக்கவில்லை. முதலிலே கொடுத்த உறுப்பினரை அனுமதிப்பதால்........

திரு. என். சுந்தரராஜ்: பிரச்னைகளைப் பல கோணங்களிலே நோக்க வேண்டுமே தவிர, ஒருவர் சொன்னால் போதும் என்றால், அந்தக் கட்சியின் சார்பிலே சொன்னதாகத்தானிருக்கும். ஆகவே, மாறாகச் சொல்ல அனுமதிக்க வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இது முடிந்த வரையிலும் சரி. இனி, ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் பேச வாய்ப்பு கொடுக்கும்போது...... ஒரு கட்சிக்கு ஒருவர் என்றுதான் வைத்திருக்கிறோம். அந்த முறையைப் பின்பற்ற வேண்டும். கட்சிக்கு ஒருவரை அனுமதிக்க வேண்டும்.

திரு. என். சங்கரய்யா: நானும் அதே கருத்தை வற்புறுத்துகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் என்று வரும்போது கட்சிக்கு ஒருவர் என்ற முறை இருப்பது அவசியம்.

திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே, இந்த அவையில் 10, 15 பேர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தாலும், கட்சிக்கு ஒருவர்....அவர்கள் யாரைப் பேசவதற்குத் தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்கள் கட்சியின் சார்பில் பேசுவதற்கு அனுமதிப்பதுதான் இந்த அவையின் மரபாக இருக்கிறது. அந்த வகையிலே பேசுவதுதான் நலம்.

திரு. என். சுந்தரராஜ்: தலைவரவர்களே, முதலாவது தீர்மானம் கொடுத்தவர் பேச அனுமதிக்கப்படுவார் என்று தாங்கள் சொன்னதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் கட்சிக்கு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதை ஏற்றுக்கொண்டேன். அப்படியே இனி நடைபெறும்.

6. அறிக்கை அளித்தல்.

மூன்றாவது சம்பளக்குழு உறுப்பினர்கள் நியமனம், பணிகள் குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டமன்றப் பேரவை விதி 82-ன்கீழ் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஓர் அறிக்கையை அவைக்கு அளிப்பார்கள்.